# தேவேந்திர குல வேளாளர்கள் குல தெய்வமும் வளரி ஆயுதமும் - பேரையூர்



வளரி





# தமிழர்களின் போர்க்கருவி - வளரி

## முன்னுரை:

வளரி என்பது பண்டைய காலங்களில் தமிழர்களால் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வகை எறிகருவி ஆகும். தமிழர்கள் போர் செய்யும் போது நீண்ட தூரம் வாளை கைகளால் வீசி எறியும் வகையில் (வாள் + எறி = வளரி(றி)) வளைந்த வடிவத்துடன் ஏறக்குறைய பிறை வடிவில் இரும்பால் செய்யப்பட்ட கருவி ஆகும். சில வளரிகள் யானைத் தந்தத்தாலும், மரக்கட்டைகளாலும் செய்யப்பட்டிருந்தன. ஆனால் மரக்கட்டைகளால் செய்யப்பட்ட இந்த வளரிகள் முயல் மற்றும் மான்களை வேட்டையாடவே அதிகம் பயன்பட்டன. சங்க இலக்கியமான புறநானூற்றில் ‘குறுங்கோ லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல்’ என்ற வரியில் குறுங்கோல் என்பது வளரியை ஒத்த ஆயுதமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. வளரிக்கு ஒத்த எறி கருவிகளை வளைதடி, எரிவளை, திகிரி, பறவளை, சுழல்படை மற்றும் படைவட்டம் என்று அழைத்தனர்.

## வளரியின் அமைப்பும் செயல்பாடும்:

வளரியானது பொதுவாக தட்டையாகவும் பிறை வடிவிலும், ஒரு புறம் கனமாகவும், மறுபுறம் லேசாகவும் கூர்மையான வெளிப்புற விளிம்புடனும் வடிவமைக்கப் பட்டிருக்கும். இதன் எடையானது 500 கிராம் முதல் 3 கிலோ கிராம் வரை இருக்கும். வளரியின் கனமற்ற நுனியை பிடித்துக் கொண்டு பலமுறை வேகமாக சுழற்றி எறிந்திட அது இலக்கினை கொடூரமாக காயப்படுத்தும். பலர் வளரியானது இலக்கைத் தாக்காவிட்டால் திரும்ப நம்மிடமே வரும் என்று தவறாக எண்ணுகின்றனர். ஆனால் இது முற்றிலும் தவறானது. வளரி இதன் எடை மற்றும் அமைப்பின் காரணமாக வளைந்து (curved Path) செல்லுமே ஒழிய திரும்ப வரவே வராது. சாதாரண இயற்பியல் அறிவு உள்ளவர்கள் கூட இதை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். வளரி இரும்பால் செய்யப்பட்ட எடை அதிகமான போர்க்கருவி என்பதால் இது எதிரிகளை வீழ்த்தவே பயன்படுத்தப்பட்டது. இதை புரிந்து கொள்வதற்கு மரத்தால் செய்யப்பட்ட பூமாராங் (Boomerang) எனப்படும் வளைதடி பற்றி அறிந்து கொள்வோம்.

முதன்முதலில் மரத்தால் செய்யப்பட்ட வளைதடியை 10000 ஆண்டுகளுக்கு முன்பே ஆஸ்திரேலியப் பழங்குடிகள் பயன்படுத்தியதாக வரலாற்றுத் தரவுகள் தெரிவிக்கின்றன. ஆஸ்திரேலியாவில் வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்ட அந்த வளைதடிகள் திரும்ப வரும் வகையில் வடிவமைக்கப் படவில்லை. அதிக தூரம் எறிவதற்கும் வெற்றி சதவீதத்தை அதிகப்படுத்தும்



வகையிலும் வளைவான மரக்கட்டைகளைப் பயன்படுத்தி தயாரித்தனர். ஆனால் தற்போதைய நவீன பூமாராங்குகள் அதன் மேல்பகுதி (Leading Edge), கீழ்பகுதி (Trailing Edge) மற்றும் மையப்பகுதி இவற்றை சரியான முறையில் தேய்த்து சரிவாக்கி, காற்றை உந்தித் தள்ளி திரும்ப வரும் வகையில் வடிவமைக்கின்றனர். இதனை தலைக்கு மேலே காற்றின் திசைக்கு எதிரே 45$^{o}$ வலது புறம் திரும்பி அதன் குழிந்த பகுதியை முன்புறம் வைத்துக் கொண்டு சுழற்றி எரிய அது திரும்ப நம்மிடமே வரும். ஒரு பூமாராங் நம்மிடம் திரும்பி வர இவ்வளவும் மிகச் சரியாக இருக்க வேண்டும். பூமாராங் செய்வற்கும் வீசுவதற்கும் kutek.net என்ற இணையதளம் பயனுள்ளதாக உள்ளது.

## வளரி திரும்ப வருமா?:

வளரிக்கும் வளைதடிக்கும் வேறுபாடுகள் பல உண்டு. நம் முன்னோர் பயன்படுத்திய இரும்பு வளரியானது வளைதடி அமைப்பில் செய்யப்பட்டிருக்காது. இரும்பால் செய்யப்பட்ட வளரியின் எடை அதிகமாக இருக்கும். வளைதடி இலேசானது. மேலும் போர்க்களத்தில் காற்றின் திசையறிந்து கோணம் பார்த்து எறிந்து கொண்டிருக்க இயலாது. எல்லாவற்றிற்கும் மேலாக வளரியானது அதன் குவிந்த பகுதி வெளிநோக்கி வைத்து எறியப்படும். ஆனால் வளைதடியானது அதன் குழிந்த பகுதி முன்னோக்கி வைத்து எறியப்படும். மன்னர் மருது பாண்டியர் சிலையில் உள்ள வளரி எறியும் முறையையும், பூமாராங் எறியும் முறையை உற்றுநோக்கினாலே இதை அறிந்து கொள்ளலாம். மன்னர் மருது பாண்டியர் எறிந்த வளரியானது 100 கெஜம் தூரம் விழுந்தது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து வளரி திரும்ப வராது என்பதை அறியலாம். இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை வளாகத்திலுள்ள அருங்காட்சியகத்தில் பல வளரிகள் உள்ளன. அங்குள்ள அருங்காட்சியரும் வளரி ஒரு போர் ஆயுதம். அது திரும்பி வராது என்றே கூறுவார். சிவகார்த்திகையன் நடித்த ஒரு படத்தில் அவர் எறியும் வளரியானது ஒரு கயிறை வெட்டிவிட்டு திரும்பி வருவது போல் காட்டிருப்பார்கள். இது அடிப்படை அறிவியல் தன்மை அற்றது.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் தாங்கள்தான் வளரியைப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் என்றும் தாங்கள்தான் போர்க்குடிகள் என்றும் கூறிவருகின்றனர். இது முற்றிலும் தவறானது. வளரியை தமிழ்நாட்டில் தேவேந்திர குல வேளாளர் போர்க்குடிகளும் பயன்படுத்தி உள்ளனர் என்பதற்கு கீழ்க்காணும் சான்றுகளைக் காண்போம். 1801 ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலேயர்கள் வளரியை தடை செய்த பின்பு அதனை நம் மக்கள் குல தெய்வ கோயில்களில் வைத்து வழிபட்டிருக்கின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பேரையூர் கிராமத்திலிந்து 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு உட்பட்ட தேவேந்திர குல வேளாளர் மக்கள் வழிபடும் மூன்று குல தெய்வ கோவில்கள் இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவையாவன,


1. தனிக்காத்தான் தர்மர் கோவில் (உரத்தூர், பேரையூர்)
2. ஆண்டி சன்னாசி (எ) சொரிமுத்தையா கோவில் (பேரையூர்)
3. முனியப்பா சாமி கோவில் (கொல்லங்குளம்)

## தனிக்காத்தான் தர்மர் கோவில், உரத்தூர்:



தனிக்காத்தான் தர்மர் கோவில் பேரையூருக்குத் வடக்கே 3 கிலோ மீட்டர் தொலைவில் உரத்தூர் என்ற பேச்சிலா கிராமத்தில் உள்ளது. பேரையூர், புல்வாய்க்குளம், மேற்கு உசிலங்குளம், சேர்ந்தை கோட்டை, வளையபூக்குளம், கதையன், மற்றும் காக்கூர் ஆகிய தேவேந்திரகுல வேளாளர் சமூக மக்களுக்குப் பாத்தியப்பட்ட இந்த குல தெய்வ கோவிலில் இரண்டு வளரி ஆயுதங்கள் வழிபாட்டில் உள்ளன. இவை இரும்பால் செய்யப்பட்டவை ஆகும். இதனை மாசிக்களரியின் போது கருப்பசாமி தனது கச்சையில் கட்டிக்கொண்டு சாமியாடி அருள்வாக்கு கூறுகிறார். இவை குறைந்தது 200 ஆண்டுகளுக்கு முன்பு கோவிலில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். தற்போது துருப்பிடித்து தேய்ந்த நிலையில் உள்ளது. இவை சுமார் 1 கிலோகிராம் எடை கொண்டவையாக இருக்கும். இவை தற்போது பேரையூர் கிராமத்திலுள்ள கோவிலுக்குச் சொந்தமான சிறு அறையிலுள்ள பூஜைப் பெட்டியில் வைத்து பாதுகாக்கப்படுகிறது.





தர்மர் சுவாமி கோயிலிலுள்ள வளரி ஆயுதம்

## ஆண்டி சன்னாசி கோவில், பேரையூர்:



இக்கோவில் பேரையூர் வடக்கு கண்மாய்க் கரையின் கீழே அமைந்துள்ளது. இக்கோவில் பேரையூர், கொல்லங்குளம், சேர்ந்தைகோட்டை மற்றும் இலந்தைக்குளம் தேவேந்திரகுல வேளாளர் சமூகத்திற்குப் பாத்தியப்பட்டது. இக்கோவில் பூஜைப் பெட்டியில் 2 வளரி ஆயுதங்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மாசிக்களரியின் போது இவை வெளியே எடுத்து வரப்படுகிறது. சாமியாடிகள் இதனை கையில் வைத்துக்கொண்டு சாமியாடி குறி சொல்கின்றனர். அந்த வளரிகள் நல்ல நிலையில் உள்ளன. பிறை போல் வளைந்து ஒரு பக்கம் கூர்மையாக உள்ளது. கீழ்புறம் உருண்டை வடிவிலான கைப்பிடி உறுதியாக உள்ளது. இவற்றின் எடை 1 கிலோ கிராம் வரை இருக்கும்.




ஆண்டி சன்னாசி சுவாமி கோயிலிலுள்ள வளரி ஆயுதம்





## முனியப்பாசாமி கோவில், கொல்லங்குளம்:



இக்கோவில் பேரையூரிலிருந்து வடக்கே 2 கிலோ மீட்டர் தொலைவில் கொல்லங்குளம் கிராமத்தின் ஊர் எல்லையில் அமைந்துள்ளது. இக்கோயிலானது பேரையூர் மற்றும் புல்வாய்க்குளம் தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தைச் சார்ந்த மக்களின் குலதெய்வம் ஆகும். இக்கோவிலுக்குப் பாத்தியப்பட்ட பூஜைப் பெட்டி புல்வாய்க்குளம் கிராமத்திலிருக்கும் ஒரு சிறு அறையில் பாதுகாக்கப்படுகிறது. இப்பெட்டியில் கனமான இரண்டு வளரி ஆயுதங்கள் ஆண்டுதோறும் வழிபாட்டில் உள்ளன. மாசி மாதப் பூஜையின் போது இந்த வளரிகளை கையில் வைத்துக் கொண்டு சாமியாடிக் கொண்டே இக்கோயிலுக்குச் சென்று வழிபடுகின்றனர். இந்த வளரியானது எடை அதிகமாகவும் உறுதியாகவும் உள்ளது. ஒவ்வொன்றும் ஒரு கிலோ வரை எடை இருக்கும். இதனை இங்கு வளைதடி என்கின்றனர். இந்த வளரிகள் காலங்காலமாக கோவிலில் உள்ளதாக இக்கோவில் பூசாரி அவர்கள் கூறுகிறார்



முனியப்பா சுவாமி கோயிலிலுள்ள வளரி ஆயுதம்





முடிவுரை:

வளரி என்பது தமிழர்கள் அனைவரும் பயன்படுத்திய போர்க்கருவி ஆகும். தேவேந்திர குல வேளாளர்கள் சமூகமும் இதனை அதிகம் பயப்படுத்தி உள்ளனர் என்பதற்கு மேற்கண்ட தரவுகளே சாட்சியாக உள்ளன. ஒரு குறிப்பிட்ட ஊரில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வளரி தொடர்பான இவ்வளவு சான்றுகள் கிடைக்கும் போது தமிழ்நாடு முழுவதும் ஆய்வுகள் செய்தால் பல தரவுகள் கிடைக்கும் என்பது உறுதி. சித்திரைத் திருவிழாவில் கள்ளழகர் மதுரை நோக்கிச் செல்லும் போது வளரி தாங்கியே செல்கிறார். இன்றளவும் தமிழ்நாட்டில் சில இடங்களில் வளரியானது வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வேறு சில இடங்களில் ஏதோ ஒரு குலதெய்வக் கோயிலில் ஒரு வரலாற்றைத் தாங்கிக் கொண்டு ஏதோ ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கலாம். அதனை வெளிக்கொணர வேண்டியது நமது கடமையாகும்.

# நன்றி